**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.218/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி. லட்சுமி |
| Husband/Father Name | வெங்கடாசலம் |
| Village /Area | பழைய பாளையம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | கூலி |
| Age | 50 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.08.2025.

**(எதிரி காணொலி முலம் மத்திய சிறைச்சாலை வேலூரில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார் )**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த சண்முகம் என்னுடைய மூத்தார் ஆவார். 08.05.2024 அன்று கோவீந்தாங்கள் ஜங்ஷனில் டீ வாங்குவதற்காக நான் சென்றேன். அங்கு வடிவேலு என்பவர் அங்கிருந்த என்னுடைய மூத்தார் சண்முகத்தை கட்டையால் அவருடைய தலையில் அடித்தார் மேலும் வடிவேல் அசிங்கமான வார்த்தையால் திட்டினார். அங்கிருந்த நபர்கள் பாதிக்கப்பட்ட என் மூத்தார் சண்முகத்தை ஆம்புலன்சில் ஏற்றி சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் மூத்தார் சண்முகத்திற்கு இரத்தம் நிற்காமல் இருந்ததால் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி என் மூத்தார் சண்முகம் இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். இது சம்பந்தமாக பாணாவரம் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடைது தான் அந்த புகார் **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்றத்தில் காணொலி காட்சி வாயிலாக ஆஜர் படுத்தப்பட்ட வடிவேல் தான் என்னுடைய மூத்தார் சண்முகத்தை தாக்கிய நபர் ஆவார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ரீப்பர் கட்டையால் தான் ஆஜர் எதிரியான வடிவேல் எனது மூத்தார் சண்முகத்தை தாக்கினார் அது **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள ரீப்பர் மரக்கட்டை எதிரி தாக்க பயன்படுத்திய கட்டையின் புகைப்படங்கள் ஆகும். அவைகள் முறையே **சா.பொ.2** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.28 15:38:12 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.